# இன்று கிறிஸ்து எழுந்தார்

இன்று கிறிஸ்து எழுந்தார் ஆ அல்லேலூயா
இன்று வெற்றி சிறந்தார் ஆ அல்லேலூயா
சிலுவை சுமந்தவர், ஆ அல்லேலூயா
மோட்சத்தை திறந்தவர் ஆ அல்லேலூயா

ஸ்தோத்திரப் பாட்டு பாடுவோம் ஆ அல்லேலூயா
விண்ணின் வேந்தனை போற்றுவோம் ஆ அல்லேலூயா
அவர் தாழ்ந்துயர்ந்தாரே ஆ அல்லேலூயா
மாந்தர் மீட்பர் ஆனாரே ஆ அல்லேலூயா

பாடனுபவித்தவர், ஆ அல்லேலூயா
இரட்சிப்புக்கு காரணர் ஆ அல்லேலூயா
வானில் இப்போதாள்கிறார் ஆ அல்லேலூயா
தூதர் பாட்டைக் கேட்கிறார், ஆ அல்லேலூயா

சாவின் பயம் நீக்கினார், ஆ அல்லேலூயா
பரிசுத்தர் ஆக்கினார், ஆ அல்லேலூயா
கைவிடாது காப்பாரே, ஆ அல்லேலூயா
நித்திய ஜீவன் அவரே, ஆ அல்லேலூயா

கிறிஸ்தோரே ஆர்ப்பரிப்போம், ஆ அல்லேலூயா
சர்வ லோகம் ஆள்கின்றார், ஆ அல்லேலூயா
மீண்டும் வரப்போகிறார், ஆ அல்லேலூயா
நம்மை சேர்த்து கொள்ளுவார், ஆ அல்லேலூயா